**I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE**
**DEPOSITIONS OF WITNESSES**
**(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)**
**DEPOSITIONS OF WITNESSES P.W.1**
**OS.NO.102/2019**

| | |
|---|---|
| **NAME** | : சரவணன் |
| **FATHER NAME** | : |
| **VILLAGE** | : |
| **TALUK** | : |
| **CALLING** | : |
| **RELIGION** | : |
| **AGE** | : |

**Solemnly affirmed in accordance with the provisions of Act x of 1873 of 22.11.2022.**

குறுக்கு விசாரணை

என்னுடைய வழக்குரையில் காலத்தைப் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை என்றால் வார்த்தையாகத்தான் பேசினோம். எழுத்து பூர்வமாக இல்லை. ஒரிஜினல் பத்திரத்தை படித்துப் பார்த்துவிட்டுதான் ரிஜிஸ்டர் செய்தேன். அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. இன்றைய நிலவரப்படி மார்க்கெட் மதிப்பு அந்த சொத்திற்கு எவ்வளவு என்றால் தற்போதைய மதிப்பு எனக்குத் தெரியாது. அக்ரிமெண்ட் போடுவதற்கு முன்னால் சொத்து சம்பந்தமாக வில்லங்கம் போட்டு பார்த்தேன். அந்த ஆவணம் என்னிடம் உள்ளது, நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. என்னிடம் ரூ.20 லட்சம் வாங்கினார். எந்த தொகையும் திரும்பத்தரவில்லை. சுரேஷ் என்னுடைய மச்சான். ரூ.3 லட்ச ரூபாயை திரும்ப செலுத்திய விவரத்தை தெரியுமா என்றால் எந்த ரூபாயும் திரும்ப செலுத்தவில்லை. நானும் வாதியும், பிரதிவாதியும் உறவினர்கள் என்பதால் நீதிமன்றத்திற்கு வெளியே வழக்கை முடித்துக் கொள்ள சமாதானமாக பேசினோம். ஆனால் சமாதானம் ஆகவில்லை. அதுபோல் பணம் கொடுத்தால் நான் வாங்கிக் கொள்ள ஒப்புக் கொள்கிறேன். நான் வழக்குரையில் கூறியுள்ள முகவரி நான் வேலை பார்க்கும் இடத்தின் முகவரி. நான் வள்ளலார், சத்துவாச்சாரியில் இருக்கிறேன். நான் வெற்றுப் பேப்பரில் பிரதிவாதியிடம் கையெழுத்து வாங்கி இந்த ஆவணங்களை தயார் செய்து வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. இன்றைய தேதியில் வழக்கு சொத்து ரூ.1 கோடிக்கு மேல் போகும் என்றாலும் நான் ரூ.25 லட்சத்திற்கு அதை வாங்கலாம் என முயற்சி செய்து இந்த வழக்கை போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. ஐந்து வருடத்திற்கு முன்பாக அந்த இடத்தின் மதிப்பு ரூ.20 லட்சம்தான். பிரதிவாதி எந்த

.......2

காலத்திலும் சொத்தை விற்கவேண்டும் என்று எண்ணவில்லை என்றாலும் அவசர தேவைக்காகத்தான் பணம் வாங்கினார் என்றாலும் எனவே இந்த அக்ரிமெண்ட் செல்லாது என்றாலும் சரியல்ல. எந்த காலத்திலும் சொத்தை விற்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. நான் என்னுடைய அதிகாரத்தை பயன்படுத்தி ஆவணங்களை தயார் செய்து வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் வில்லங்கம் பார்க்காமல் ஆவணங்களை தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சேல் விவரம் தெரியாமல் அக்ரிமெண்ட் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சொத்தின் மதிப்பை குறைவாக மதிப்பிட்டு நீதிமன்றக் கட்டணம் செலுத்தியபடியால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனவே நான் இந்த வழக்கில் கோரியுள்ள பரிகாரம் தவறு என்றால் சரியல்ல. எனவே இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சர்க்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று சொல்லி ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டார்.

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.